# தமிழ்நாடு அரசு

# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006

# எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, ஜனவரி 2019

# தனித்தேர்வர்களுக்கான தக்கல் திட்டம்

# செய்திக்குறிப்பு

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்**

ஜனவரி2019–ம் ஆண்டில் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு **26.11.2018 முதல் 05.12.2018 வரை** விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. மேற்காண் நாட்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

01.01.2019அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் தக்கல் திட்டத்தின்மூலம் கீழ் **11.12.2018, 12.12.2018 மற்றும் 13.12.2018** ஆகிய மூன்று நாட்களுக்கு மட்டும் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) சென்று on line மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

2. **தேர்வுக் கட்டண விவரம்**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/– சிறப்புக்கட்டணம் ரூ.500/– (அரசாணை எண்.19, பள்ளிக்கல்வித்துறை, நாள்:13.02.2003) மற்றும் ஆன்லைன் மூலம் விண்ணப்பத்தினைப் பதிவு செய்யும் கட்டணம் ரூ.50/– மொத்தம் ரூ.675/–ஐ தனித்தேர்வர்கள் சேவை மையங்களிலேயே நேரடியாக செலுத்தலாம்.

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை**

**1. முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்:**

(அ) விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**2. ஏற்கனவேஎட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்:**

(அ) ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின்/சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

- வ.எண்.1 மற்றும் 2ல் குறிப்பிடப்பட்ட தனித்தேர்வர்கள் ரூ.40/–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, சுயமுகவரியிட்ட உறை ஒன்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் வழி பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் காணலாம்.

6. ஆன்லைன் விண்ணப்பங்களை தேர்வர்கள் **13.12.2018 அன்று மாலை 5.00** மணி வரைசேவை மையங்களில் பதிவு செய்யலாம்

ஒம்/–

**இயக்குநர்**

சென்னை–600 006

நாள்: 05.12.2018